# பேரவைக் கதைகளில் (2010-2019) காணப்படும் பொறுப்புணர்வு பண்பு

# The Values of Responsibility Found in *Peravai Kathaigal* (2010-2019)

விஷ்ணு கிருஷ்ணன் / Vishnu Krishnan[1]
ஜமுனா தேவராஜ் / Jamunah Debarajh[2]

Date of submission: 2021-06-15
Date of acceptance: 2021-10-12
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: Jamunah Debarajh
Email: sothivaanan@yahoo.com

## Abstract

This paper deals with the moral values shown in Peravai Kathaigal, a list of short stories published between the year 2010 and 2019. Moral education can be defined as helping children and young people to gain beliefs and values about what is right and what is wrong. This set of beliefs guides others in their environment, intentions, attitudes, and behaviors. Thus, moral education helps children to develop the mindset to follow such beliefs and values. Various types of moral values are shown in Peravai Kathaigal through the main and supporting characters. This paper discusses the value of responsibility shown by these characters via their dialogues and their actions in multiple situations. Apart from utilizing around 100 stories from Peravai Kathaigal as the primary source of data, other supporting materials were used as the secondary source to complete the study. This article adopted library research as the approach to understand and identify the values in these selected stories. The moral values were identified based on the curriculum drafted for Moral Education of Malaysian secondary schools. Most of the stories show values like good-heartedness, responsibility, and love in many situations. Responsibility, in addition to other virtues, could be seen in about 40 percent of the short stories in this study. Economic hardship, lack of personal morality, civilized development, family upbringing, and conservative thinking are some of the factors found to cause the lack of sense of responsibility

**Key Words:** Moral education, Peravaik Kathaigal, Short stories, Moral Values, Responsibility, Character.

## அறிமுகம்

பேரவைக் கதைகள் முதன் முதலில் பல்கலைக்கழக மாணவர்களின் எழுத்துத்திறனை ஊக்குவிப்பதற்காகத் தொடங்கப்பட்டு 1986ஆம் ஆண்டில் அதன் முழு வடிவத்தைப் பெற்றது. இதில் இரு பிரிவுகளான மாணவர் பிரிவு மற்றும் பொதுப் பிரிவு அடங்கியுள்ளன.

[1] The author is a postgraduate student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. kabilanyuga@gmail.com

[2]The author is a postgraduate student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. sothivaanan@yahoo.com

இப்போட்டி இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களுடைய எழுத்துத் திறனை வளப்படுத்தவும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டி பல்வேறு பரிணாமங்களுடன் தொடர்ந்து அறுபது ஆண்டுகள் பயணித்து விட்டது. இது பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்படும் போட்டியென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேரவைக் கதைகளில் மலேசிய இந்திய குடும்பச் சூழல்களும் சமுதாயப் பிரச்சனைகளும் விழுமியங்களும் கருப்பொருளாக விவரிக்கப்பட்டிருக்கிறது. காலந்தோறும் சமுதாயத்தில் நிலவிவரும் மது, உறவுகள், அரசியல், தமிழ்ப்பள்ளி, கோவில், இளைஞர்களின் பின்னடைவு ஆகியவற்றின் வரலாற்றுப் படிமங்களாக இதைப் பார்க்க முடிகிறது. அது மட்டுமின்றி, உலகமயமாதலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்களையும் சிக்கல்களையும் இதில் காணக்கிடைக்கின்ற கதைகளில் விரிவாகப் பார்க்க முடிகிறது. இதில் நன்னெறிப் பண்புகளைக் கதாபாத்திரங்கள் வழியாகக் காணலாம். பேரவைக்கதைகளில் பல்வேறு நன்னெறிப் பண்புகள் வெளிப்பட்டிருந்தாலும் பொறுப்புணர்வு பண்பு அதிகமாக வெளிப்படுகிறது. பொறுப்புணர்வு பண்பு எவ்வாறு இக்கதைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மட்டுமின்றி அதன் மூலம் எவ்வாறு அந்தச் சிக்கல்களுக்குக் காரணமான சூழல்களையும் பிரச்சனைகளையும் கண்டறியப்பட்டிருக்கிறது.

## ஆய்வு நெறி

இந்த ஆய்வுக் கட்டுரை நூலக ஆய்வு முறையில் திரட்டடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் ஆய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## ஆய்வு முன்னோடி

பேரவைக் கதைகள் பற்றிய சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சில, பேரவைக் கதைகளின் வரலாற்றைப் பற்றி அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணைப்புரிந்தன. இன்னும் சில ஆய்வுகள் பெரும்பாலும் கருப்பொருள், இலக்கியக் கூறுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

Tema-Tema Popular dalam Antologi Cerpen எனும் தலைப்பில் அண்ணாதுரை முருகையா அவர்கள் 1980-2010 வரை உள்ள பேரவைக் கதைகளில் காணப்படும் கருப்பொருள்களை ஆய்வு செய்திருக்கிறார். இவ்வாய்வில் இந்திய மக்களின் சிந்தனைப் பற்றியும் ஆய்வு செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வைத் தொடர்ந்து Aplikasi Agamarabu dalam Cerpen Peravaik Kathaigal எனும் தலைப்பில் விமலா ஆறுமுகம் எனும் ஆய்வாளார் 20062016 வரை உள்ள பேரவைக் கதைகளில் காணப்படும் அகமரபு வெளிப்பாடு குறித்து ஆய்வு செய்திருக்கிறார். அதுமட்டுமின்றி இவ்வாய்வு தொல்காப்பியர் காலத்தில் அகமரபு தன்மைக்கும் தற்காலத்தில் காணப்படும் அகமரபு தன்மைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்கிறது.

இலக்கியத்தில் நன்னெறிப் பண்புகள் காணப்படுவதைப் பற்றிய ஆய்வுகள் குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பேரவைக் கதைகள் மீது இவ்வாய்வு நடத்தப்படாமலே இருக்கின்றது. 'Penerapan Ajaran Moral Karya Ramayana Dalam Pendidikan Moral Sekolah Menengah Terdapat Tujuh Bidang Pembelajaran Moral' எனும் தலைப்பில் ஆறுமுகம் சின்னசாமி அவர்கள் 2019ஆம் ஆண்டு ஓர் ஆய்வை மேற்கொண்டுள்ளார். இதில் இராமயணத்தில் இரு நன்னெறிப் பண்புகளான மனித உரிமை மற்றும் சுற்றுச்சூழலை நேசித்தல் ஆகிய நன்னெறிப் பண்புகளை மட்டும் ஆய்வு செய்திருக்கிறார்.

மேலும் 2018ல் மோகனா முனுசாமி Nilai-Nilai Moral dalam Cerpen Karya R.Sundarapandian எனும் தலைப்பில் ஆய்வு செய்திருக்கிறார்.

இதில் இர.சுந்தரப்பாண்டியனின் கதை எழுதிய பாங்கையும் அதில் காணப்பட்டுள்ள பல்வேறு விதமான நன்னெறிப் பண்புகளைப் பற்றி இவ்வாய்வில் ஆராயப்பட்டிருக்கிறது.

## நன்னெறிப் பண்புகள் ஒரு விளக்கம்

நன்னெறிக் கல்வி என்பது குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு எது சரி எது தவறு என்பது குறித்த நம்பிக்கைகளையும் மதிப்புகளையும் பெற உதவுவதாக வரையறுக்கலாம் (Eow Boon Hin, 2002). இந்த நம்பிக்கைகளின் தொகுப்பு மற்றவர்களுக்கும் அவர்களின் சூழல், நோக்கங்கள், அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகள் போன்றவற்றை வழிநடத்துகிறது. இதுபோன்ற நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளுக்கு ஏற்ப செயல்பட மனப்பான்மையை வளர்ப்பதற்கு நன்னெறிக் கல்வி குழந்தைகளுக்கு உதவுகிறது. இதன் அடிப்படையில், இது குழந்தைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க ஊக்குவிக்கிறது. பலருக்கு, இந்தக் கேள்விகள் மத நம்பிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன, ஆனால் தார்மீக கல்வித் திட்டங்கள் மதத்தையும் ஒழுக்கத்தையும் கருத்தியல் ரீதியாக பல்வேறு பரிணாமங்களில் பார்க்கப்படுகின்றன (Elly, *2007*, p*120)*. நன்னெறி என்பது ஒரு சிக்கலான கருத்தியல். இது அடிக்கடி பயன்படுத்தப்படும் சொல் என்றாலும், அதன் பொருள் வெவ்வேறு தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் வேறுபடுகிறது. ஒரு சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படும் நன்னெறிப் பண்புகள் இன்னொரு சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை (Maslow, 1954).

## பேரவைக் கதைகளில் வெளிப்படும் பொறுப்புணர்வு பண்பு

மலேசிய நன்னெறிக் கல்வி பாடத்திட்டத்தின் அடிப்படையில் பொறுப்புணர்வு பண்பு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதினாறு பண்புகளில் பொறுப்புணர்வும் ஒன்றாகும். பாடத்திட்டத்தின் படி பொறுப்புணர்வு ஒரு தனிமனிதன் தாமாக முன்வந்து தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளையும் சரியாகச் செய்து முடிக்க வேண்டும் என்று பொருள் கூறுகிறது. பேரவைக் கதைகளில் காணப்படும் சிறுகதைகளில் பல்வேறு சூழலில் கதைமாந்தர்களின் வழி பொறுப்புணர்வு பண்பு ஆங்காங்கே வெளிப்படுகிறது. ஏறக்குறைய நாற்பது கதைகளில் இப்பண்பு வெளிப்பட்டிருக்கிறது. இப்பொறுப்புணர்வு பண்பு வெளிப்படுவதைக் குடும்பத்தின் மீதும் தன் மீதும் காட்டுகின்ற அக்கறை, செயல்கள் போன்றவற்றின் மூலம் காணலாம். பின்வருவனவற்றுள் முறையான உதாரணங்களுடன் பொறுப்புணர்வு பண்பு வெளிப்படும் சூழலைக் காணலாம்.

இறந்தவனைப் பற்றிய வாக்குமூலம் *(24 ஆம் தொகுதி, 2010)* எனும் சிறுகதையில் எப்பொழுதும் மதுமயக்கத்தில் இருக்கின்ற ஒரு குடும்பத்தலைவனின் பொறுப்பற்ற செயலின் மூலம் பொறுப்புணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது. ஆறுமுகம் எனும் குடும்பத்தலைவன் குடும்பத்திற்கான எவ்வித பொருளாதார உதவியையும் செய்ததில்லை. மாறாக தன் மனைவியை அடித்து துன்புறுத்தியவாறு வாழ்வதின் மூலம், பொறுப்புணர்வு பண்பு வெளிப்படுத்தப்படுகிறது. பின்வரும் உரையாடல்,

> ”இவன் குடிச்ச குடிக்கும்,ஆடுன ஆட்டத்துக்கும் ,சம்பாதிகிற காச வூட்டுக்கூட காட்டாம குடிச்சே அழிச்சதும்,புள்ளதாச்சிக்கூடன்னு பாக்கமா அடி ஒதன்னு கொடுத்ததும்” *(2010,*p. *3)*

வழி கணவனின் பொறுப்பில்லாத தன்மையை வெளிப்படுத்துகிறது. அதீதமான குடிப்பழக்கம் பெரும்பாலானவர்களிடம் இருப்பதை இக்கதையின் வழி காணமுடிகிறது. குடிப்பழக்கத்தின் மோகத்தினால் பணத்தைக் குடும்பச்செலவுக்குக் கொடுக்காமால் இருப்பதோடு தன் சுய நினைவிழந்து மனைவியைத் துன்புறுத்தும் இழிநிலைக்கு அக்குடும்பம் தள்ளப்படுகிறது. மேலும்

தனது குடிப்பழக்கத்தின் விளைவாக தன் குடும்பத்திற்குத் தேவையான பொருளாதார வசதியைச் செய்து கொடுக்க முடியாமல் குடும்பம் தடுமாறுகிறது.

தொடர்ந்து, அங்கையற்கண்ணியின் திருமணமும் ஐந்தாண்டு திட்டங்களும் (24 ஆம் தொகுதி, 2010) எனும் சிறுகதையில் அங்கையற்கண்ணியின் பெற்றோர்கள் தனது மகளுக்குத் திருமணம் செய்ய எண்ணுகிறார்கள். மகளுக்குத் திருமணம் செய்ய எண்ணிய பெற்றோர்கள் பல்வேறு விதமான நிபந்தனைகளை விதிக்கிறார்கள். நாற்பத்தி இரண்டு வயது வரைக்கும் பல்வேறு நிபந்தனைகளை விதித்தப் பின்னும் மகளுக்குத் திருமணம் நடைபெறவில்லை. இதைக் கருத்தில் கொள்ளாமல் அங்கையற்கண்ணியின் பெற்றோர்கள் பொறுப்பில்லாமல் இறுதியாய் வந்த மாப்பிள்ளையிடமும் பல்வேறு நிபந்தனைகள் விதித்த காரணத்தால் திருமணம் நடைபெறாமல் தள்ளிப்போகின்றது.

> ”ஏண்டி நம்மாளா இல்லையான்னு ஏன் விசாரிக்கலே? நான்தான் விசாரிக்கச் சொன்னன்லே என்று பூங்குழலியைக் கடிந்து கொண்டாள் மண்டோதரி. அங்கையற்கண்ணி அடுத்த ஐந்தாண்டுக்குத் தயாராகி கொண்டிருந்தாள்” (2010, p. 18)

எனும் சூழலின் வழி மகளின் வாழ்க்கையைக் குறித்து கவலைப்படாதப் பெற்றோர்களை மறைமுகமாக அவர்களின் பொறுப்பற்ற பண்பினைக் காட்டுகிறது. அங்கையற்கண்ணியின் பெற்றோர்கள் மகளுக்குத் திருமணம் செய்ய எண்ணும் செயல் பொறுப்புணர்வைக் காட்டியிருந்தாலும் தன்மகளுக்கு வயது கூடிக்கொண்டே போவதைப் பற்றி அக்கறையில்லாமல் இருப்பது சுயநலத்தையும் இச்சூழலில் பொறுப்புணர்வு பண்பை மறைமுகமாகக் காட்டுகிறது. திருமணத்திற்குத் தடையாக பெற்றோர்களின் பழமையான சிந்தனை மற்றும் சாதிய அடிப்படையிலான குறுகிய மனப்போக்கு இச்சிக்கலுக்குத் தூண்டுகோலாக அமைகிறது. மேலும் திருமணத்திற்குத் தேவையான மனப்பொருத்தத்தைக் காணாமல் பிற தேவைகளான அழகு, அந்தஸ்து, பொருளாதாரம் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது இப்பிரச்சனைக்கு அடிப்படையாக அமைகிறது.

தொடர்ந்து, கல்லுக்குள் தேரைகள் (24ஆம் தொகுதி,2010)எனும் சிறுகதையின் மூலம் ஒரு குடும்பத் தலைவனின் பொறுப்பற்ற நிலையைக் காட்டுகிறது. இக்கதையில் குறிப்பிடப்படும் கணவர் வீட்டிற்குப் பணம் தராமலும் பெற்ற பிள்ளைக்குப் பிறப்புப் பத்திரம் பெறாமலும் நிலையான வேலை இல்லாமலும் இருக்கின்ற ஒரு கதை மாந்தராக சித்தரிக்கப்படுகின்றார். இக்கதாபாத்திரம் பல்வேறு சூழல்களில் பொறுப்பில்லாமல் இருப்பதைச் செயல்களின் மூலமாகவும் உரையாடல்களின் மூலமாகவும் புரிந்துகொள்ள முடிகிறது.

> ”கொஞ்ச நாள் வேலைக்குப் போவான் .என்ன வேலை, எங்கே வேலை என்று கேட்க முடியாது.வாரம் ஒரு முறை செலவுக்குப் பணம் கொடுப்பான். அப்புறம் ஊர் சுற்ற ஆரம்பித்து விடுவான்” (2010, p.43)

எனும் சூழலில் இந்தக் கதாபாத்திரம் குடும்பத்தின் மீது மறைமுகமாகப் பொறுப்பற்று இருப்பது இந்த ஆய்வில் தெரியவருகிறது. மேலும் ஒரு குடும்பத்தலைவனானவன் குடும்பத்தின் மீதும் குடும்ப பொறுப்புகள் மீதும் அக்கறையில்லாமல் இருப்பது குடும்பத்தைத் தீய வழிக்கு இட்டுச்செல்வதைக் காணலாம். தனிமனித ஒழுக்கம் இல்லாமை இக்கதாபாத்திரத்தில் குடும்பத்தலைவனின் மூலம் வெளிப்படுகிறது. தனிமனித ஒழுக்கம் அவனை வேலைக்குச் செல்ல அனுமதியாமல் சோம்பேறித்தனமாக வீட்டில் இருக்கச் சொல்லி தூண்டுகிறது.

தொடர்ந்து, பச்ச வண்ண சேலை (24ஆம் தொகுதி, 2010) எனும் சிறுகதையில் வயதான அம்மாவிற்கும் நவீன நாகரீக மோகத்தில் மூழ்கியிருக்கும் மகளுக்கும் நடக்கின்ற போரட்டங்களைத்தான் கதை விவரிக்கின்றது. தன் அம்மா தான் கவர்ச்சியாக உடுத்துவதையும்

இரவு நேரங்களில் வீடு திரும்புவதையும் பொறுப்போடு கண்டிப்பதைச் சற்றும் விரும்பாத மகளை மீண்டும் மீண்டும் கண்டித்துப் பொறுப்புணர்வோடு வளர்க்க நினைக்கின்ற அம்மாவின் கதாபாத்திரம் மூலம் பொறுப்புணர்வு பண்பு வெளிப்படுகிறது. பின்வரும் உரையாடலின் வழி இதைக் காணலாம்.

> *"அதுக்காக அப்படியே விட்டுற முடியுமா!! நீங்களும் ஒவ்வொரு நாளும் கண்டிக்கீறிங்க.அவ காதுல போட்டுக்குறாளா!நாகரீக மோகம் அவளைப் பிடிச்சு ஆட்டிக்கிட்டு இருக்கு" (2010,* p.*56)*

இதன் வழி தான் கண்டிப்பதைத் தன் மகள் தவறாகப் புரிந்துகொண்ட பின்னும் தொடர்ந்து மகளின் எதிர்காலம் குறித்து கவலைப்படும் பொறுப்புள்ள அம்மாவின் கதாபாத்திரம் வழி பொறுப்புணர்வு பண்பு மேலோங்கி நிற்கிறது.

இதனையடுத்து, பார்த்திபன் (24ஆம் தொகுதி, 2010) எனும் சிறுகதையில் பார்த்திபனை நம்பி கல்விக் கடன் உதவிக்காக பிணையாளியாக கையெழுத்திட்ட தனது அப்பாவின் நண்பருக்குமான போராட்டமே இக்கதையின் கருவாகும். கல்விக் கடன் பெற்ற பிறகு மீண்டும் செலுத்தாமல் பொறுப்பில்லாமல் இருக்கின்ற பார்த்திபனின் செயல் தனது அப்பாவின் நண்பருக்கு பெறும் பிரச்சனையாக உருவெடுக்கிறது. கல்வி கடன் அளித்த நிறுவனத்திடமிருந்து நீதிமன்றம் மூலம் நினைவுறுத்தல் கடிதம் பெற்ற பிறகு தந்தையின் நண்பர், பார்த்திபனின் பொறுப்பற்ற நிலையைக் கண்டு மனம் வருந்துகிறார்.

> *"பார்த்திபா!பார்த்திபா! அடப்பாவி நீயா பொறுப்பின்றி நடந்துகொள்கிறாய் ?நீயெல்லாம் படித்துப் பட்டம் பெற்றவனா? வாங்கிய கடனைச் செலுத்தாமால் அலட்சியமாக இருக்கும் உன்னை படித்த மனிதன் என்று அழைப்பதற்கு அவமானமாக இருக்கிறது" (2010,* p.*66)*

எனும் சூழலில், பார்த்திபனின் பொறுப்பற்ற பண்பு உணர்த்தப்படுகிறது. தனக்கு வழங்கப்பட்ட கடனுதவிக்கு நன்றி உணர்வு இல்லாமலும் அதனை மீண்டும் கட்ட வேண்டிய பொறுப்புணர்வு இல்லாமலும் அதனால் தனக்காக பிணை கையெழுத்திட்ட அப்பாவின் நண்பருக்கும் பிரச்சினை என்பதை உணராமல் இருக்கும் பார்த்திபனின் மனநிலை மற்றும் செயல், பொறுப்புணர்வு பண்பு இல்லாததை வெளிப்படுத்துகின்றது.

மேலும், அவள் தோற்றுப்போனாள் *(29ஆம் தொகுதி, 2015)* எனும் சிறுகதையில் தன் தனிப்பட்ட கனவுகளுக்காக குடும்பத்தைப் பொறுப்போடு கவனிக்க தவறிய ஒரு பெண்ணின் கதையைச் சித்தரிக்கிறது. நிறைமதி தன் கணவன் தனிமையோடு இருந்த போதும் தன் பிள்ளைகள் தாயின் அரவணைப்பிற்கு ஏங்கியபோதும் தாய், மனைவி எனும் இரு பொறுப்புகளையும் சுமக்காமல் தன் ஆசையின் பின்னால் ஓடுவது அக்குடும்பத்தின் அமைப்பை சீரழிக்கிறது. மேலும் திருமணத்திற்குப் பின் பொருளாதார தேவையைக்கருதி ஒரு பெண் வேலை செய்வது தேவையென்றாலும் புகழுக்கும் பேராசைக்கும் பலியாகிவிடும் சூழலில் நிறைமதி எனும் கதாபாத்திரம் பொறுப்பற்ற தன்மையைக் கேள்விக்கு உற்படுத்தவேண்டியதாகின்றது.

> *"நிறைமதி தாமதமாகத்தான் வீட்டுக்குத் திரும்புவாள்.வியாபாரத்தில் அவளுக்கு ஆயிரத்து எட்டு சிக்கல்.சில நேரம் அவள் வரும்போது பிள்ளைகள் தூங்கியிருப்பார்கள் மதிவாணனும்" (2015,* p.*62)*

எனும் சூழலில் நிறைமதி தொழில் காரணமாக மனைவிக்குரிய பொறுப்புகளிலிருந்து விலகியிருப்பது தன் கனவுகளைத் துரத்தும் ஒரு பெண்ணுக்கு குடும்பம் பெரும் சுமையாக இருப்பதை வெளிப்படுத்தியிருந்தாலும் பொறுப்புகளை நிராகரிப்பது குடும்பத்தின் நியாயமான தார்மீகத் தேவைகளைக் கேள்விக்குறியாக்குகிறது.

இதனையடுத்து, மனதோடு விளையாடும்

*மனசாட்சிகள் (30ஆம் தொகுதி, 2016) எனும் சிறுகதை தாய் தந்தையின் மீது பிள்ளைகளுக்குண்டான பொறுப்பைக் காட்டுகிறது. தமது அந்திமகாலத்தில் பிள்ளைகள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என நினைப்பது தவறான கருத்தியல் அல்ல. இருந்தாலும் தற்காலத்தில் நேரக்குறைவு, குடும்பபாரம், பொருளாதார சூழல் ஆகியவை பிள்ளைகள் பெற்றோர்களைக் கவனிக்க முடியாத இக்கட்டான சூழலையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பெற்றோர்கள் முழுக்க முழுக்க பிள்ளைகளை நம்பியில்லாமல் ஓரளவுக்கு தமது அந்திமகால சேமிப்புக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை தந்தை கதாபாத்திரத்தின் வழி புரிந்துகொள்ள முடிகிறது. இந்த நவீன யுகத்தில் பல்வேறு சிக்கல்களைக் காரணமாக பிள்ளைகள் கூறினாலும் பெற்றோர்களை முடிந்த வரை கவனித்துக்கொள்வது முக்கியமான பொறுப்பாகும். இக்கதையில் வரும் தந்தையைத் தனது மூத்தப் பிள்ளையும் இரண்டாவது பிள்ளையும் கவனிக்க தவறுவது பொறுப்பற்றநிலையைக் காட்டுகிறது. கீழ்க்காணும் சூழலில் தனது கடைசி மகன் சிரமங்கள் பல இருந்தும் தனது தந்தையை எப்படியாவது காப்பாற்ற முனையும் பாங்கு பொறுப்புள்ள மகனின் தன்மையைக் காட்டி நிற்கிறது.*

> *"ஆகட்டும் பரவாயில்லை. அப்பா இருக்கும் வரை நானே அவரை முழுமையாகப் பார்த்துக் கொள்கிறேன் எனச் சிவபாலன் முழுப் பொறுப்பையும் எடுத்துக்கொண்டான்" (2016, P.1010)*

> *"பெற்ற பிள்ளைகள் பணமோ பொருளோ கொடுத்து உதவ வேண்டாம். இன்றைய நிலையில் காரணங்களைக் கூறும் பிள்ளைகள் இருக்கிறார்களே தவிர ,மனமுவந்து பெற்றோர்களுக்கு உதவி செய்ய கூடிய பெற்றோர்கள் கணிசமான அளவில்தான் இருக்கிறார்கள்" (2016,p.102).*

*மேற்குறிப்பிடப்பட்ட பல்வேறு சூழல்களில் வெளிப்படும் பொறுப்புணர்வு பண்பை, இக்கதைகளில் காணப்படும் பல்வேறு கதாபாத்திரங்களின் மூலம் வெளிப்படுகிறது. ஒவ்வொரு சூழலிலும் பொறுப்புணர்வு பண்பு மறைமுகமாகவும் நேரடியாகவும் வெளிப்பட்டிருப்பதை இந்த ஆய்வின் வழி காணலாம்.*

### முடிவுரை

*இந்த ஆய்வுக்கு உட்படுத்திய சிறுகதைகளில் 40 சதவீதக் கதைகளில் பொறுப்புணர்வு பண்பு வெளிப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. மேலும் மீதியுள்ள கதைகளில் பிற நற்பண்புகளும் காணப்படுகிறது. இக்கதைகளின் வழி பொறுப்புணர்வு பண்போடு உள்ள மக்களும் பொறுப்புணர்வு பண்பு இல்லாத மக்களும் வாழ்ந்த வாழ்க்கைச் சூழலை கதாசிரியர்கள் அழகாக சித்தரித்துள்ளனர். பொருளாதரச் சிக்கல், தனிமனித ஒழுக்கம் இன்மை, நாகரீக வளர்ச்சி, குடும்ப வளர்ப்பு, பழமைச் சிந்தனை போன்றவற்றை இப்பொறுப்புணர்வு பண்பு இல்லாமல் இருப்பதற்கு காரணிகளாக அமைகிறது. சிறுகதையை ஒரு பொழுது போக்கிற்காக மட்டும் படிக்காமல், அதன் கருத்துகளையும் அறிய வேண்டும் (விபீ. கிபீக்ஷீஷீயீ, 1984). படைப்பிலக்கியங்கள் சுவாரசியத்திற்கு மட்டும் இல்லாமல் மனிதனுக்கு பல நல்ல பண்புகளையும் கற்றுக் கொடுக்கின்றன. அவ்வகையில் ஒரு குடும்பத்தில் மட்டுமின்றி தனக்கான பொறுப்புகளையும் சரிவர செய்கின்ற தனிமனிதனே இந்த வாழ்க்கையில் வெற்றிப்பெறுகிறான். பொறுப்பற்று நடக்கின்ற ஒருவன், வாழ்வில் பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்க நேர்கிறது. அந்தப் பிரச்சனைகளால் அவனுக்கு மட்டுமின்றி அவனைச் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் துன்பம் ஏற்படுகிறது என்பதை இக்கதைகளின் வழி பார்க்கலாம். எனவே. ஒவ்வொரு தனிமனிதனும் தன்மீது பொறுப்போடு இருந்தால், பிறர் மீதும் பொறுப்புணர்வோடு கடமையாற்றுவான் என்பது இக்கதைகளின் வழி வெளிப்படும் உண்மையாகும்.*

## References


Alhabshi, D. D. (n.d.). Dasar Pendidikan Negara .

Ali, M. M., Mustapha, R., & Jelas, Z. M. (2006). An Empirical Study on Teachers' Perceptions towards Inclusive Education in Malaysia. *International Journal of Special Education*, v21 n3 p36-44 .

Ariffin, N. (2006, February). Nilai Budi Masyarakat Melayu .

Fitria, N. (2015). Bimbingan Kelompok Berbasis Tata Nilai budaya Lampung Untuk meningkatkan Tingkahlaku. *Jurnal Fokus Konseling Volume 1 No. 2,*, 162-171.

Gunasegaran. (1999). Tamil Naavalgalil Kudumba Chidhaivugal. Pondicherry, Pudhuvai, India: Pondicherry University.

Hasanah, E. (2019). Perkembangan Moral Siswa Sekolah Dasar Berdasarkan Teori Kohlberg . *Jurnal Pendidikan Ilmu Pengetahuan Sosial Indonesia*, 131-145.

Jamaludin, N. H. (2020). Teori Perkembangan Moral Kognitif Dalam Membuat Keputusan Pertim bangan Moral, Kecekapan Moral Dan Keputusan Moral. *Jurnal Kejuruteraan, Teknologi dan Sains Sosial Vol. 3 Issue 1*.

Mohd Sofi Bin Nasri, R. H. (2016). Falsafah Pendidikan Kebangsaan Memperkasakan Peranan Pendidikan Teknik. *Seminar Pendidikan Khas* .

Nurhayati, S. R. (2006). Telaah Kritis Terhadap teori perkembangan moral Lawrence Kohlberg . *Jurnal Psikologi pendidikan dan kounseling Fakultas ilmu pendidikan*, 95-104.

Pa.Kanagasababathy. (2011). *Valuvaana kudumbamum Valamana indiyaavum* . Chennai: Kilakku Pahipagam .

Rahimah Jamaluddina*, A. R. (2017). Penerapan Nilai Kekeluargaan: Adakah Ianya Penting? *Special Issue on Impact of Engineering, TVET and Social Science on the Economic Competitiveness of Asia Pacific.*, 9: 1-5 (2017) 87–92.

Rahman, A. A. (2010). Teori Perkembangan Moral dan Model Pendidikan Moral . *Jurnal Ilmiah Psikologi*, 37-44.

Sari, N. (2013). The importance teaching moral values to the students. *Journal of English and Education 2013, 1(1), 154-162*, 154-162.

Shahril Shahril, C. B. (2009). Dasar Dan Perancangan Pendidikan Negara Sejak 52 Tahun Kemerdekaan Malaysia ; Satu Kajian . *Jurnal Administrasi Pendidikan is issued by Program Studi Administrasi Pendidikan Sekolah Pascasarjana Universitas Pendidikan Indonesia*.

Yusof, M. Z. (2012). Faktor - Faktor penyumbang dalam pertimbangan moral pelajar agama. *Malaysian Journal of Learning and Instruction: Vol. 9*, 81-109.